அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 38/2019

எனது இல : EST-1/ MISCL/ 06/ 0032(I)
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.12.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச்சட்டச் சபை தலைவர்கள்

## 2020 ஆம் ஆண்டு - கடமைகளை ஆரம்பித்தல்

அதிமேதகு சனாதிபதி அவர்களினால், தனது "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" என்ற தொனிப்பொருளில் அமைந்த தேர்தல் விஞ்ஞாபனத்திற்கமைய திறமையான வினைத்திறன் மிக்க பிரஜை, சந்தோசமாக வாழும் குடும்பம், ஒழுக்க விழுமியமிக்க சிறந்த பண்புகளைக் கொண்ட சமூகமொன்றை உருவாக்கி அதனூடாக சுபீட்சமான தேசம் என்ற நான்குவகையான நோக்கங்களையும் வெற்றிகொள்வதற்காக பத்து வாக்குறுதிகளுடன் கூடிய வேலைத்திட்டமொன்றினை முன்வைத்துள்ளார். அதற்கமைய எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் அந்நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான ஆண்டாகப் பிரகடனப்படுத்தி சகல பொருளாதார இலக்குகளையும் அடைவதனை முதன்மையாக கொண்டு அனைத்து அரசாங்க அலுவலர்களும் தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலன்கருதி அர்ப்பணிப்புடன் பணியாற்றத்தக்க மனப்பாங்கை வளர்த்துக்கொள்ளும் அவசியத்தினை வலியுறுத்தி, கடமைகளைத் தொடங்கும் முதல் நாளான 2020 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை சகல அரச ஊழியர்களின் பங்குபற்றலோடு விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு இத்தால் அறிவுரை வழங்குகின்றேன்.

02. அதன் பிரதான உத்தியோகபூர்வ வைபமானது சனாதிபதிச் செயலாளரின் தலைமையில் சனாதிபதி செயலக வளாகத்தில் அன்றைய தினம் மு.ப. 9.30 மணியளவில் நடாத்தப்படும். இப் பிரதான வைபவத்திற்கு நேரொத்ததாக அன்றைய தினம் அதே நேரத்தில் இந் நிழ்ச்சித்திட்டத்தை, தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகல அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களிலும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனவே, இது குறித்து கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டமானது அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

I. சகல பணியாட்தொகுதியினரனதும் முன்னிலையில் நிறுவனத்தின் அல்லது அலுவலகத்தின் தலைவர் தேசியக் கொடியினை ஏற்றுதல். (பணியாட் தொகுதியினரின் சகல உறுப்பினர்களும் ஒரே இடத்தில் ஒன்றுகூடுவதற்கு இடவசதிகள் போதாதவிடத்து அனைத்து உறுப்பினர்களும் பங்குபற்றக் கூடியவாறு பொருத்தமான மாற்று ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்).

II. தேசியக் கொடியினை ஏற்றியதன் பின்பு தேசிய கீதத்தினைப் பாடுதல்.

III. படை வீரர்கள் உள்ளிட்ட நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த சகலரையும் நினைவுகூர்வதற்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துதல்.

IV. சகல பணித்தொகுதியினரும் தமக்கு இலகுவான மொழியில் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அரசாங்க அலுவலர்களின் சத்தியம் / உறுதிமொழியினை உரத்து வாசித்தல்.

V. சுபீட்சமான இலங்கையினுள் திறமையான வினைத்திறன் மிக்க பிரஜை, சந்தோசமாக வாழும் குடும்பம், ஒழுக்க விழுமியமிக்க சிறந்த பண்புகளைக் கொண்ட சமூகமொன்றை உருவாக்குவதற்காக ஆளணியினர் அனைவரினதும் பங்களிப்பினை நேர்மையாகவும், தாமதமின்றியும், மிகுந்த அர்ப்பணிப்புடனும் வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிறுவனத்தின் தலைவர் சுருக்கமாக உரையாற்றுதல்.

03. இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமானதாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தயவுடன் தாங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.

ஒப்பம்/. எஸ். ஹெட்டியாரச்சி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள் : கௌரவ மாகாண ஆளுநர்கள்

# அரசாங்க சேவை சத்தியப் பிரமாணம் / உறுதி மொழி

இரண்டாயிரத்து' இருபதாம் ஆண்டு சனவரி மாதம் கடமைகளைத் தொடங்கும் முதல் நாளான இன்றைய தினம்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

இந் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை யதார்த்தமாக மாற்றியமைக்கும்

புதியதோர் ஆண்டின் ஆரம்பத்தில் காலடிவைக்கிறோம்.

இன்று ஆரம்பமாகும் புத்தாண்டினுள்

ஒரே நாட்டின், ஒரே இனத்தின், ஒரே கொடியின் நிழலில்

ஐக்கியமாகவும், ஒரே மனப்பான்மையுடனும் மலர்ச்சியடைகின்ற

பாதுகாப்பான தாய் நாட்டினுள்

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கினை முன்னிறுத்தி

ஒழுக்க விழுமியமிக்க, சட்டத்திற்கு அடிபணிகின்ற மற்றும் சிறந்த பண்புகளைக் கொண்ட சமூகத்தை உருவாக்குவதும்

நிலைபேறான சுற்றாடல் முகாமைத்துவத்தை முன்னிலைப்படுத்தி

பௌதீக வளங்களை விருத்தி செய்வதன் மூலம்

மக்கள் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை ஏற்படுத்துவதும்

நவீன தொழில்நுட்பத் திறன் கொண்ட மனித வளத்தை வழிநடாத்தும்

தூய்மையான அரச ஆளுகையின் பங்காளியான நான்,

பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறுகின்ற அரசாங்க ஊழியனாக,

அரசாங்க கொள்கைகள் மற்றும் நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு என்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற கடமைப் பொறுப்புக்களை

வினைத்திறனாகவும்,

பயன்மிக்கதாகவும்,

திடசங்கற்பத்துடனும்,

உயரிய அர்ப்பணிப்புடனும்,

நேர்மையாகவும்,

மக்களுக்கு பக்கச்சார்பின்றியும்,

நிறைவேற்றுவேன் என்று சத்தியப்பிரமாணம் செய்கின்றேன் / உறுதிமொழிகின்றேன்.